2009 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலுக்கு நன்றி கூறி, திருத்துறைப்பூண்டி நகரம், முத்துப்பேட்டை, கோட்டூர் போன்ற பகுதிகளில் ஆவின் பால் நிலையத்தினைத் தொடங்கிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனைப் பரிசிலனை செய்து, வாய்ப்பு இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110-ன்கீழ் அறிக்கை

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் 19-2-2009 அன்று காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில், (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். 19-2-2009 அன்று காவல் துறையினர் மற்றும் வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து கீழ்க்கண்ட உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள்:

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. செ.ம. வேலுசாமி, திரு. சி. சண்முகவேலு, திரு. செ. பொன்னுதுரை, திரு. செ. தாமோதரன், திரு. எல். ரவிச்சந்திரன், திரு. பி. தங்கமணி,

திரு. சு.ப. வேலுமணி, திரு. தா. மலரவன், திரு. ஓ.கே. சின்னராஜ், திரு. ஆர். சின்னசாமி, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி;

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, திரு. டி. சுதர்சனம், திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திருமதி டி. யசோதா, திரு. து. அமரமூர்த்தி, திரு. கு. ஹசன் அலி, திரு. ஆர்.எம். பழனிசாமி, திரு. பா. வேல்துரை;

பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக, திரு. ஜி.கே. மணி, திரு. அ. தமிழரசு, திரு. இல. வேலுசாமி, திரு. பெ. கண்ணன், டாக்டர் க. நெடுஞ்செழியன், திரு. வை. காவேரி, திரு. தி. வேல்முருகன், திரு. தி.க. ராஜா, திரு. கோ. எதிரொலி மணியன்;

இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக, செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், திரு. சி. கோவிந்தசாமி, திரு. வே. மாரிமுத்து, திரு. ப. டில்லி பாபு, திரு. ஞா. ஜான் ஜோசப், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா;

இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக, திரு. வை. சிவபுண்ணியம், திரு. எஸ். இராசசேகரன், திரு. தி. இராமசாமி, திரு. கே. உலகநாதன், திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி;

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, திரு. நா. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோரும், சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரனும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இது குறித்து பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-05

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையைப் பேரவையில் வைத்திடத் தங்களின் மேலான அனுமதியைக் கோருகிறேன்.

2009 பிப்ரவரி 20] [திரு. துரைமுருகன்]

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து, தமிழகத்திலுள்ள பல தரப்பினரும், (குறுக்கீடுகள்) தங்கள் வசதி வாய்ப்பிற்கேற்ப, பல்வேறுவிதமான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தி வருவதையடுத்து, தமிழகத்தைச் சேர்ந்த (குறுக்கீடுகள்) வழக்கறிஞர்களும் பல கட்டப் போராட்டங்களை இலங்கைத் தமிழர்களுக்காக தொடர்ந்து ஒரு சில நாட்களாக (குறுக்கீடுகள்) நடத்தி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக தேசத்தின் சில முக்கியத் தலைவர்களின் உருவப் படங்களை எரித்தும், உருவச் சிலைகளை அவமதித்தும் வந்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக வழக்கறிஞர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே, மோதல்களும், பூசல்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அரசின் சார்பில் சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக வழக்கறிஞர்கள் இலங்கைத் தமிழர்களுக்காக பல்வேறுவிதமான போராட்டங்களை (குறுக்கீடுகள்) நடத்திக்கொண்டிருக்கிற நிலையில், சிதம்பரம் நடராஜர் கோயில் நிர்வாகத்தைத் தமிழக அரசு ஏற்று நடத்துவதற்கு எதிரான மேல்முறையீட்டு வழக்கில், தன்னையும் ஒரு வாதியாகச் சேர்க்கும்படி கோருவதற்காக, திரு. சுப்பிரமணிய சுவாமி 17-2-2009 அன்று காலை 10 மணியளவில் உயர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். காலை 11-50 மணியளவில் வழக்கறிஞர்களில் ஒரு பிரிவினர். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்த நிகழ்ச்சி நீதிமன்ற வளாகத்திற்குள்ளே நடைபெற்ற நிகழ்ச்சி. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் சொல்லட்டும், அமைதியாக இருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்ற வளாகத்திற்குள்ளே நடைபெற்ற நிகழ்ச்சி, நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியினுடைய ஆலோசனையின்படி, அவர்களுக்கு உரிய நீதி வழங்க வேண்டுமென்று நடைபெற்ற அந்த மோதல்களைக் குறித்து அந்த நீதிமன்றமே தீர்மானிக்க வேண்டுமென்று அவர்களிடத்திலே

தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடுகள்) அவர்களே முடிவெடுத்து இருக்கிறார்கள். ஆகவே, நீதிமன்ற முடிவு என்ன என்பதை இந்த அவைக்குத் தெரிவிக்க இந்த அரசு கடமைப்பட்டிருக்கிறது. அரசுக்கோ அல்லது அரசியல் கட்சிகளுக்கோ நேரடித் தொடர்பு இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை 11-50 மணி அளவில் வழக்கறிஞர்களில் ஒரு பிரிவினர் முழக்கங்களை எழுப்பியவாறு உள்ளே நுழைந்து, அங்கே அமர்ந்திருந்த திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்கள் மீது அழுகிய முட்டைகளை வீசித் தாக்கியுள்ளனர். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

இந்தச் சம்பவம் நடைபெற்றவுடன், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், டி.ஜி.பி., சென்னை மாநகர போலீஸ் கமிஷனர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) ஆகியோரை, தலைமை நீதிபதி அவர்களைச் சந்தித்து, நிலைமைகளை விளக்கி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கச் சொன்னார். மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், புலனாய்வுத் துறை, காவல் துறைத் தலைவரை நேரடியாக மருத்துவமனைக்கே அழைத்து, திரு. சுப்பிரமணிய சுவாமி அவர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நடைபெற்ற சம்பவங்களுக்காக வருந்துவதாகவும் தெரிவிக்கக் கூறினார்.

திரு. சுப்பிரமணிய சுவாமி தாக்கப்பட்டது சம்பந்தமாக, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ஒரு வழக்கறிஞர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். மற்ற வழக்கறிஞர்கள் தேடப்பட்டு வந்தனர்.

முற்பகல் 10-10

இந்நிலையில், 19-2-2009 அன்று இந்த வழக்கிலே தேடப்பட்டு வந்த வழக்கறிஞர்கள், திரு. சுப்பிரமணிய சுவாமி மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் புகார் மனு ஒன்றினைத் தருவதற்காக உயர் நீதிமன்றத்தின் வளாகத்திலுள்ள காவல்

2009 பிப்ரவரி 20] [திரு. துரைமுருகன்]

நிலையத்திற்கு வந்துள்ளனர். திரு. சுப்பிரமணிய சுவாமிமீது தாங்கள் கொடுக்க வந்த புகாரினைப் பதிவு செய்துவிட்டு. அதன் பின்னர் தங்களைக் கைது செய்யுமாறு அவர்கள் கூறினார்கள். இதனை ஏற்று, அவர்கள் கொடுத்த புகார் மனுவினைப் பெற்று வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது. (குறுக்கீடுகள்) அதன் பின், திரு. சுப்பிரமணிய சுவாமியைக் கைது செய்துவிட்டு, பின்னர் தங்களைக் கைது செய்ய வேண்டும் என்றனர். (குறுக்கீடுகள்) இதன் தொடர்ச்சியாக இருசாராருக்கும் இடையே தள்ளுமுள்ளுவில் ஆரம்பித்து, கல் எறிதலில் தொடர்ந்து, மாண்புமிகு நீதிபதி திரு. ஆறுமுகப் பெருமாள் ஆதித்தன் அவர்கள் காயம்பட்டு, இறுதியாக காவல் நிலையம் கொளுத்தப்பட்டு, வன்முறை முற்றி, இரு தரப்பினரும் காயமடைந்துள்ளனர். (குறுக்கீடுகள்)

மருத்துவமனையில் இருந்த மாண்புமிகு முதலமைச்சர் இந்தத் தகவல் கிடைத்தவுடன், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர், D.G.P., மாநகரக் காவல் துறை ஆணையர், கூடுதல் காவல் துறை இயக்குநர் (சட்டம்-ஒழுங்கு) ஆகியோரை நேரடியாக உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி, தலைமை நீதிபதி அவர்களை சந்திக்கக் கோரினார்கள். தலைமை நீதிபதியின் கருத்திற்கிணங்க, உயர் நீதிமன்ற வளாகத்திலிருந்து காவல் துறையினர் வெளியேறினர். மேலும், மருத்துவமனையில் இருந்தவாறே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களுக்குப் பின்வரும் கடிதத்தை அனுப்பினார்:

"To

The Hon'ble Justice S.J. Mukhopadhaya,
Acting Chief Justice,
High Court of Madras,
Chennai.

Dear C.J.,

Unprecedented violence has taken place. I have sent the Chief Secretary, Secretary, Home and D.G.P. to apprise you of the situation. To find out who is at fault, whether the advocates or the police, and to ascertain the basic causes for this situation, your co-operation is very essential for me and for this Government. I am expecting your valuable suggestions to contain this

violence and to ensure justice is done and peace is restored. Though I am in the hospital, if you wish to see me, I will come and meet you even in an Ambulance.

Thanking you,

Yours sincerely,
(M. KARUNANIDHI)"

என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு இந்தக் கடிதத்தை அனுப்பியதோடு, நடைபெற்ற இந்தச் சம்பவங்கள் குறித்து உண்மை நிலவரங்களைக் கண்டறிய சி.பி.ஐ. விசாரணை நடத்துவதற்கு (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அனைத்து நடவடிக்கைகளும் இந்த அரசின் சார்பில் எடுக்கப்படும் என்று உத்தரவிட்டுள்ளார். அந்த அடிப்படையில், இந்தச் சம்பவம் குறித்த வழக்கினை சி.பி.ஐ. விசாரணைக்காக அனுப்பி வைக்கப்படும் என்பதை இந்த அவைக்கும், நாட்டிற்கும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் எழுந்து நின்று கோஷமிட்டுக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். (குறுக்கீடுகள்) விதி-110 அறிக்கையின்மேலே விவாதம் கிடையாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) விதி-110 அறிக்கையின்மேலே விவாதம் கிடையாது என்று இருக்கிறது. விதிப்படி அதன்மீது விவாதம் நடத்த முடியாது. எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் தெளிவான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார். விதி 110 அறிக்கையின்மேலே விதிப்படி விவாதம் கிடையாது. அதனாலே, இனி அதன்மேலே விவாதிக்க முடியாது.

2009 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

அதனால், அடுத்த நிகழ்ச்சிக்கு நான் போகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-15

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகள் போன்ற பகுதிகளில் குடிநீர் குறைவாக வழங்கப்படுவதால் அதனைத் தவிர்ப்பதற்கு (குறுக்கீடுகள்) அப்பகுதியில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். விதி 110 அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. நீங்கள் அதையும் மீறி அவை நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தினால், நான் வெளியேற்ற வேண்டியது வரும். (குறுக்கீடுகள்) விவாதம் கிடையாது. விவாதம் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவித்தால் நான் வெளியேற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் அப்போதைய முதலமைச்சர் தினந்தோறும் விதி 110-ன்கீழ் அறிக்கையைப் படிப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அறிக்கையின்மீது கருத்துக் கூறவோ, விளக்கம் கேட்கவோ அனுமதித்ததே கிடையாது. இன்றைக்கு அவமானம், அவமானம் என்று சொல்பவர்கள் அன்றைக்கு வாய் மூடி என்ன செய்துகொண்டிருந்தார்கள்? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்று. நடைபெற்ற சம்பவம் யாரும் விரும்பத்தக்கது அல்ல. (குறுக்கீடுகள்) எனவேதான், பாரபட்சமற்ற முறையில் ஒரு விசாரணை, உண்மையைக் கண்டறிவதற்காக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு (குறுக்கீடுகள்) சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்ட பின்னாலே, அதன்மேலே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அதன்மேலே பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் கிடையாது.

[2009 பிப்ரவரி 20

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110 அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் அமைதியாக உட்காருகிறீர்களா அல்லது வெளியேற்ற வேண்டுமா? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக உட்காருகிறீர்களா அல்லது வெளியேற்ற வேண்டுமா? விதி 110 அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்றவர்களின் உணர்வை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், ஒன்றை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்) ஒரு விரும்பத்தகாத நிகழ்வு அரசுக்கும், நீதிமன்றத்திற்கும், காவல் துறைக்கும் உருவாகிவிடக்கூடாது. (குறுக்கீடுகள்) நடவடிக்கை இருக்கட்டும் என்பதற்காகவும், அதே நேரத்தில், தவறு செய்தவர்கள் யார் என்பதை உண்மையாகக் கண்டுபிடிப்பதற்காகவும் சி.பி.ஐ. விசாரணைக்கு நாங்கள் உத்தரவிட்டுள்ளோம். அதுவும் முதலமைச்சர் அவர்கள் மருத்துவமனையிலிருந்து உடனடியாக C.J. அவர்களுக்கு, இதற்காக நான் நேராக ஆம்புலன்ஸிலேகூட வந்து உங்களைச் சந்திக்கத் தயார், என்று கடிதம் எழுதியிருக்கிறார். நீதிமன்றம் என்ன சொல்கிறதோ, அதைச் செய்து தருகிறோம் என்று சொல்கிறார். இதற்கு மேலே என்ன செய்ய வேண்டுமென்று இந்த அரசிடம் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) இதற்கு மேலும் நீங்கள் ஏதாவது செய்தால், அது அரசியல் ஆகும். அரசியலுக்காக நீங்கள் ஆர்ப்பாட்டம் செய்யலாமே தவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கோ, நீதிக்கோ நீங்கள் வாதாடுவதாக இருக்காது. இப்போது நீங்கள் ஏதாவது பேசி, சி.பி.ஐ. விசாரணைக்குக் குந்தகம் வரக்கூடாது என்பதைத் தலைவர்களிடம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அதற்குமேலே உங்கள் இஷ்டம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 110 அறிக்கையின்மீது விவாதம் கிடையாது. அதை allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்) நான் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். உட்காருகிறீர்களா அல்லது வெளியேற்றவா? (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்)

2009 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் விதிகளுக்கு மாறாகச் செயல்பட்டு, பேரவை நடவடிக்கைகளை நடைபெறவிடாமல் குந்தகம் விளைவிப்பதால், அவர்கள் அனைவரையும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

முற்பகல் 10-20

4. கவன ஈர்ப்பு

வேலூர் மாவட்டம், தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.*

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் என்ன படித்தார் என்றே தெரியவில்லை, எங்கள் காதில் விழவில்லை. எனவே மீண்டும் ஒரு முறை அதனைப் படிக்குமாறு அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பேச அழைத்தது எதற்கு என்று தெரியுமல்லவா?

திரு. சி. ஞானசேகரன்: ஒன்றுமே கேட்கவில்லை, அவர் மீண்டும் ஒரு முறை படித்துவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தீர்கள். அதன்மீது மட்டும் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.